# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 44 /2021

**வழக்கு சாட்சி :PW1(LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஞ்சலை | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | மூக்கன் | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | போலம்பட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | |

(எதிரி ஆஜர்.)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 29th day of November 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது போலம்பட்டியில் குடியிருந்துவந்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 01.01.2021 ம் தேதி மாலை 06.30 மணிக்கு எனது கணவர் மூக்கன் என்பவர் எங்களது வீட்டில் இருந்து அவரது TVS excel வாகனத்தில் கிளம்பி இலுப்பூருக்கு அரிசி வாங்க புறப்பட்டு சென்றார். பிறகு 07.45 மணியளவில் எனது ஊரைச் சேர்ந்த எனக்கு போன் செய்து எனது கணவருக்கு மேட்டுச்சாலை பாலத்தின் அருகே ERS 23 என்ற பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது கணவருக்கு தலை, கால் அடிப்பட்டதாக சொன்னார். நான் உடனே விபத்து நடந்த இடத்திற்கு வந்தேன். எனது கணவரை பார்த்த போது அவருக்கு தலை இல்லாமல் இருந்தது. அவர் அங்கேயே இறந்து கிடந்தார். பிறகு இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது கணவரை அனுப்பி வைத்தார்கள் . எனது கணவருக்கு பேருந்து மோதி தான் விபத்து ஏற்பட்டது என்ற தகவலை தெரிந்து கொண்டேன். யார் பேருந்தை ஓட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் மனு அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி</u>**

1. எனது கணவர் வீட்டில் இருந்து இலுப்பூருக்கு செல்லும் போது விபத்து நடந்ததா அல்லது அரிசி வாங்கிவிட்டு திருமப வரும் போது விபத்து நடந்ததா என்றால் திரும்ப வரும போது விபத்து நடந்தது. அரிசி வாங்கிவிட்டு எங்களது ஊருக்கு வரவேண்டும் என்றால் மேற்கில் இருநது கிழக்கு நோக்கி செல்ல வேண்டும என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் ஒரு வாகனமும், ஒரு பெண்ணும்,

ஒரு ஆணும் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். நின்று கொண்டிருந்த மேற்சொன்ன வாகனம், ஒரு பெண் மற்றும் ஒரு ஆணை எனது கணவர் முந்தி செல்லும் போது விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள் என்றால் சரிதான். எனது கணவர் வாகனத்தை ஓட்டும் போது நின்று கொண்டிருந்த மேற்சொன்ன வாகனத்தை கவனிக்காமல் , அந்த வாகனத்தை இடித்து எனது கணவர் ஓட்டிய வாகனத்தில் இருந்து தூக்கி எறியப்பட்டு அவர் சென்ற திசையில் இருந்து எதிர் திசையில் வந்து கொண்டிருந்த பேருந்தின் சக்கரத்தின் அருகில் விழுந்து விட்டார் , என்றாலும், எதிரியால் அவரது வாகனத்தை நிறுத்த முடியவில்லை என்றாலும் சரியல்ல.

2. விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகில் இரண்டு பக்கமும் பாலக்கட்டை இருந்தது என்றால் சரிதான். பாலக்கட்டைக்கு அருகில் இரண்டு புறமும் வாரி தண்ணீர் செல்வதற்கு பெரிய பள்ளம் உள்ளதுஎன்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் எனது கணவர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். விபத்து நடந்த மறுநாள் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, விபத்து நடந்த அன்றே இரவு 10.00 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுததேன். விபத்தை ஏற்படுத்திய ஓட்டுநர் யார் என்று தெரியாது என்றால் சரிதான், அவர் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன்.

3. நான் கொடுத்த புகாரை யார் எழுதினார்கள் என்றால் காவல் நிலையத்தில் நின்று இருந்த நபர் எழுதினார். அந்த புகாரில் நான் சம்பவ இடத்தில் பார்த்த போது எனது கணவருக்கு தலை இல்லாமல் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது கணவர் விபத்து நடந்த இடத்தில் இருந்த போது நான் அவரை சென்று பார்த்ததாக எனது புகாரில் சொல்லவில்லை எனறால் சரியல்ல. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது கணவர் விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியானது புத்தாண்டு தினமான ஜனவரி 1 என்றால் சரிதான். அரிசி வாங்கிவிட்டு மது அருந்திவிட்டு எனது கணவர் வந்து கொண்டிருந்த போது அவருக்கு எதிரே இருந்த வாகனத்தை கவனிக்காமல் அதன் மீது மோதி தூக்கி வீசப்பட்டு பேருந்தின் சக்கரத்தின் அருகே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. எதிரியால் ரோட்டின் சூழ்நிலை மற்றும் சம்பவ சூழ்நிலையால் விபத்தை தவிர்க்க இயலாமல் போய்விட்டது என்றால் சரியல்ல. விபத்து காப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக புனையப்பட்ட புகாருக்கு அனுசரணையான பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.